சுற்றறிக்கை இலக்கம்: 2005/1

எனது இலக்கம்: வி.பி.இ. எம்.1/100
பதிவாளர் நாயகம் திணைக்களம்
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11.
2005.01.25

அனைத்துப் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்கள்,

**கடல் கொந்தளிப்பினால் ஏற்பட்ட திடீர் மரணங்களைப் பதிவு செய்தல்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக இவ்வலுவலகத்தினால் வெளியிடப்பட்ட வி.பி.இ/சுற்றறிக்கை/2004/01 ஆம் இலக்க மற்றும் 2005.01.07 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கையின் தொடர்ச்சியாக இது வெளியிடப்படுகிறது.

02. மேற்படி விடயத்திற்கு அமைவாக மரணங்களைப் பதிவு செய்வது தொடர்பாக எனது முந்தைய சுற்றறிக்கையின் 02 மற்றும் 03 ஆம் பந்திகளில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள், சட்ட ரீதியான சிக்கல்கள் காரணமாக உடனடியாக ரத்துச் செய்யப்படுகின்றன.

03. அதற்கமைய, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் 'பி 11' (B 11) படிவத்தின் மூலம் இத்தகைய மரணங்களைப் பதிவு செய்வதை உடனடியாக நிறுத்துமாறு பணிக்கப்படுகின்றது.

04. எனினும், அச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ் மரண விசாரணை அதிகாரிகளினால் வழங்கப்படும் மரண விசாரணை அறிக்கைகளின் அடிப்படையில் மாத்திரம் இத்தகைய மரணங்களைத் தொடர்ச்சியாகப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

(ஒப்பம்)

பதிவாளர் நாயகம்

பிரதிகள்:

1. செயலாளர், அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு – தகவலுக்காக.
2. செயலாளர், நீதி மற்றும் நீதித்துறை அமைச்சு – தகவலுக்காக.
3. அனைத்து மாவட்டச் செயலாளர்கள்.
4. அனைத்து வலயப் பொறுப்பு உதவிப் பதிவாளர் நாயகங்கள்.
5. அனைத்துப் பிரதேச செயலாளர்கள்.